## 12th History Lesson 6 Questions in Tamil

## 6] தேசியவாத அரசியலில் வகுப்புவாதம்

1) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பாக முகலாயர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் நாட்டின் பெரும் பகுதிகளை ஆட்சி செய்தனர்.

ii ) ஆளும் வர்க்கங்கள் முஸ்லிம்களாக இருந்ததால் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் சில சலுகைகளை ஆளும் வர்க்கத்தினரிடமிருந்துப் பெற்றனர்.

iii ) அலுவலக மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் தேவ நகரி மொழி இருந்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

2) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) ஆங்கிலேயர் முன்னிருந்த முறையை படிப்படியாக மாற்றி ஒரு புதிய நிர்வாக முறையை அறிமுகப்படுத்தினர்.

ii ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கிலக் கல்வி முக்கியத்துவம் பெறத்தொடங்கியது.

iii ) 1806ஆம் ஆண்டு புரட்சியே ஆளும்வர்க்கத்தினரின் இறுதி வாய்ப்பாக அமைந்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

3) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) புரட்சியின் கடுமையான அடக்குமுறைகளைத் தொடர்ந்து, முஸ்லிம்கள் தங்களது நிலம், வேலை உள்ளிட்ட வேறு பல வாய்ப்புகளையும் இழந்ததோடு வறுமை நிலைக்கும் தள்ளப்பட்டனர்.

ii ) இத்தகைய நிலைக்குத் தள்ளப்பட்டதை பொறுத்துக்கொள்ள முடியாத அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழும் நிலை ஏற்பட்டது.

iii ) 1806 ஆம் ஆண்டு புரட்சிக்குப்பின் வாழ்ந்த முதல் தலைமுறையினர் சிலர் ஆங்கிலேயரின் அனைத்து நடவடிக்கைகளையும் விரும்பினர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

4) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) ஆங்கிலேய காலனியக் கொள்கையால் ஏற்படுத்தப்பட்ட புதிய வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்ட இந்தியர்களோடு போட்டியிட நேர்ந்ததால் முஸ்லிம்கள் சீற்றம் கொண்டனர்.

ii ) கல்வி கற்ற மேல்வகுப்பு இந்துக்கள் தேசிய உணர்வு பெற்று எழுந்தனர்.

iii ) ஆங்கிலேயர்கள் நடுத்தர வர்க்க இந்தியர்களை காங்கிரஸின் வளர்ச்சியை அதிகப்படுத்தும் ஒரு சக்தியாகப் பயன்படுத்தினர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

5) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) ஆரம்பகால தேசியவாதிகள் சிலர் தேசியவாதத்தை இந்துமத அடித்தளத்தில் மட்டுமே உருவாக்கமுடியும் என்று நம்பினர்.

ii ) சர்வபள்ளி ராதா கிருஷ்ணன் குறிப்பிடுவது போல 1875இல் நிறுவப்பட்ட ஆரிய சமாஜத்தின் மூலம் அரசியலில் இந்து மறுமலர்ச்சிக்கான குரல் ஒலிக்கத் தொடங்கியது.

iii ) ஆரிய சமாஜம் இந்து மதத்தின் உயரியத் தன்மைகளை உறுதியுடன் முன்வைத்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

6) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வடஇந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் தோன்றிய பசு பாதுகாப்புக் கழகங்கள் இந்து வகுப்புவாதம் வளர்வதற்கு ஊக்கமளித்தன.

ii ) ஆரிய சமாஜம் போன்ற நிறுவனங்கள் எடுத்த முயற்சிகள் 1891 முதல் அன்னிபெசண்ட் அம்மையாரால் வழிநடத்தப்பட்ட பிரம்ம சமாஜத்தின் மூலம் வலுப்பெற்றன.

iii ) அன்னிபெசண்ட் இந்து தேசியவாதிகளில் ஒருவராகத் தன்னை அடையாளப்படுத்தினார்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

7) "பண்டைய மதங்களைப் புத்துயிர்ப்பு செய்து வலுப்படுத்தி, உயர்த்துவதே இந்தியர்களின் முதற்பணி", என்று குறிப்பிட்டவர் யார்?

A) திலகர்

B) அன்னிபெசண்ட்

C) தயானந்த சரஸ்வதி

D) மதன் மோகன் மாளவியா

8) இந்து – முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்திய இயக்கம் எது?

A) அலிகார் இயக்கம்

B) சித்தி இயக்கம்

C) தியோபந் இயக்கம்

D) வாஹாபி இயக்கம்

9) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) அலிகர் இயக்கத்தினர் இஸ்லாமை அதனுடைய ஆதித்தூய்மைக்கு அழைத்துச் செல்ல விரும்பினர்.

ii ) இஸ்லாமின் உயிரை உருக்குலைத்துக் கொண்டிருப்பதாக வாஹாபிகள் கருதிய சில மூடப்பழக்கங்களை முடிவுக்குக் கொண்டுவர விரும்பினர்.

iii ) வாஹாபிகளில் தொடங்கி கிலாபத்காரர்கள் வரையானோர் அடிமட்டச் செயல்பாடுகளில் காட்டிய செயற்முனைப்பு முஸ்லிம்களை அரசியல் மயமாக்குவதில் முக்கியப் பங்காற்றியது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

10) பின்வருவனவற்றுள் முஸ்லிம் உணர்வு மேலோங்க காரணமானவை எவை?

i ) 1870களில் வங்காள அரசாங்கம், நீதிமன்றம் மற்றும் அலுவலகங்களில் உருதுக்குப் பதில் இந்தி மொழியை அறிமுகப்படுத்தியது.

ii ) பாரசீக அரேபிய எழுத்து வடிவத்திற்குப் பதில் நாகரி எழுத்து வடிவத்தைக் கொண்டு வந்தது.

iii ) முஸ்லிம்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் பாகுபாடு காட்டப்பட்டது

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

11) "பழைய ரோமானிய இலட்சியமான பிரித்தாளுதல் என்பது நமதாக வேண்டும்" என்று எழுதியவர் யார்?

A) எல்பர்ன் பர்க்

B) நிகிடின்

C) சார்லஸ் வில்சன்

D) எல்பின்ஸ்டோன்

12) கூற்று: வடஇந்தியாவில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையேப் பகைமை வளர்ந்தது.

காரணம்: அனைத்துக் கட்சிகளும் குறுங்குழுவாத அணுகுமுறையைப் பின்பற்றின.

A) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

B) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

13) பின்வரும் கூற்றுகளிலிருந்து சரியானவற்றைத் தேர்வு செய்க.

i ) 19ஆம் நூற்றாண்டின் கடைசி பதிற்றாண்டுகளில் ஏராளமான இந்து – முஸ்லிம் கலவரங்கள் வெடித்தன.

ii ) 1892 ஜூலை – ஆகஸ்டில் தென்னிந்தியாவில் கூட ஒரு பெருங்கலகம் மதுரையில் நடைபெற்றது.

A) கூற்று (i) மற்றும் (ii) சரி

B) கூற்று (i) சரி (ii) தவறு

C) கூற்று (i) தவறு (ii) சரி

D) கூற்று (i) மற்றும் (ii) தவறு

14) சரியான கூற்றுகளைக் கண்டுபிடிக்கவும்.

கூற்று I : ஜூன், 1872 இல் வடமேற்கு மாகாணங்களில் ஆசாம்கர் மாவட்டத்தில் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் ஒரு சர்ச்சை ஏற்பட்டது.

கூற்று II : ஐக்கிய மாகாணங்கள், பீகார், குஜராத் மற்றும் பம்பாய் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பரந்த பகுதியில் பரவிய கலகங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிவாங்கின.

கூற்று III : கௌராக்ஷினி சபைகள் (பசு பாதுகாப்பு சங்கங்கள்) மிகவும் போர்க்குணம் கொண்டவையாக மாறின.

A) I மற்றும் II

B) I மற்றும் III

C) II மற்றும் III

D) அனைத்தும்

15) சரியான கூற்றுகளைக் கண்டுபிடிக்கவும்.

கூற்று I : பசுவதைத் தொடர்பான கலகங்கள் 1883க்குப் பின் அடிக்கடி நடைபெற்றன.

கூற்று II : 1883 மற்றும் 1891க்கிடையே ஹரியானாவில் மட்டும் இத்தகைய 15 பெரும் கலகங்கள் வெடித்தன.

கூற்று III : பஞ்சாபைச் சேர்ந்த பசுப் பாதுகாவலர்கள், மத்திய மாகாணத்தின் கௌராக்ஷினி சபா செயல்பாட்டாளர்கள் ஆகியோர் இந்த கூட்டமைப்பில் இணைந்தனர்.

A) I மற்றும் II

B) I மற்றும் III

C) II மற்றும் III

D) அனைத்தும்

16) வகுப்புவாதத்தைத் தடுப்பதில் காங்கிரசு கண்ட தோல்வி தொடர்பான சரியான கூற்றுகளைக் கண்டுபிடிக்கவும்.

கூற்று I : இந்திய தேசிய காங்கிரஸ் அதனுடைய உறுப்பினர்கள் இந்து வகுப்புவாத அமைப்புகளில் செயல்படுவதைத் தடுக்க இயலவில்லை.

கூற்று II : முஸ்லிம்கள் காங்கிரஸ் மீது நம்பிக்கை இழந்தனர்.

கூற்று III : ஆரிய சமாஜத்தின் 'சுத்தி' மற்றும் 'சங்கதன்' நடவடிக்கைகளில் காங்கிரஸ்காரர்கள் பங்கேற்க தடை செய்யப்பட்டனர்.

A) I மற்றும் II

B) I மற்றும் III

C) II மற்றும் III

D) அனைத்தும்

17) வகுப்புவாதத்தைத் தடுப்பதில் அரசாங்கம் கண்ட தோல்வி தொடர்பான சரியான கூற்றுகளைக் கண்டுபிடிக்கவும்.

கூற்று I : பிரிட்டிஷ் அரசாங்கம் பசு பாதுகாப்புச் சங்கங்களை சட்டத்திற்குப் புறம்பானவை என்று அறிவிக்கத் தவறியது.

கூற்று II : வகுப்புவாதத்திற்கு காரணமானவர்களை கைது செய்யத் தவறியது.

கூற்று III : பிரிட்டிஷார் வேண்டுமென்றே காங்கிரஸ்காரர்களை இந்து வகுப்புவாதம் மற்றும் மறுமலர்ச்சியாளர்களோடு அடையாளப்படுத்தினர்.

A) I மற்றும் II

B) I மற்றும் III

C) II மற்றும் III

D) அனைத்தும்

18) இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கியபோது, பல்வேறு மத, சமூக குழுக்களுக்கிடையே ஒற்றுமை வளர்வதை கண்டு கவலைகொண்ட அரசுச் செயலாளர்?

A) எல்பர்ன் பர்க்

B) எல்ஜின்

C) எல்பின்ஸ்டோன்

D) ஹேமில்டன்

19) "கருத்து வேற்றுமையும், மோதலும் குறைந்த அளவு ஆபத்துடையது" என்று யாருக்கு கடிதம் எழுதப்பட்டது?

A) எல்பர்ன் பர்க்

B) எல்ஜின்

C) எல்பின்ஸ்டோன்

D) ஹேமில்டன்

20) பின்வருவனவற்றுள் சரியான கூற்றுகளைக் கண்டுபிடிக்கவும்.

கூற்று I : காங்கிரஸ் நடவடிக்கைகள் ஆரிய சமாஜம் போன்ற இந்து அமைப்புகளில் நிறைய காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்டபோதிலும், காங்கிரஸ் தலைமை சமயச்சார்பற்றதாகவே இருந்தது.

கூற்று II : இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது கூட்டத்தில் பசுவதையைக் குற்றமென அறிவித்து, தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என சில காங்கிரஸ்காரர்கள் முயற்சிசெய்தனர்.

கூற்று III : ஒரு குறிப்பிட்ட இனத்தைப் பாதிக்கும் தீர்மானம் முன்மொழியப்படும்போது எதிர்க்கும் உறுப்பினர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் அத்தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்ற முடிவுக்கு காங்கிரஸ் வந்திருந்தது.

A) I மற்றும் II

B) I மற்றும் III

C) II மற்றும் III

D) அனைத்தும்

21) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு

i ) அலிகார் இயக்கத்தின் நிறுவனரான சர் சையது அகமது கான், தொடக்கத்தில் காங்கிரசின் ஆதரவாளராக இருந்தார்.

ii ) இந்துக்களால் ஆளப்படும் நாட்டில், சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு தக்க உதவிகள் கிடைக்காது என்று எண்ணினார்.

A) கூற்று (i) மற்றும் (ii) சரி

B) கூற்று (i) சரி (ii) தவறு

C) கூற்று (i) தவறு (ii) சரி

D) கூற்று (i) மற்றும் (ii) தவறு

22) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு

i ) முஸ்லிம் தலைவர்களான பத்ருதீன் தியாப்ஜி, பம்பாயைச் சார்ந்த ரஹமதுல்லா சயானி, சென்னையைச் சேர்ந்த நவாப் சையது முகமது பகதூர், வங்காளத்தைச் சேர்ந்த ஏ.ரசூல் ஆகியோர் காங்கிரசை ஆதரித்தனர்.

ii ) தென் இந்தியாவில் பெரும்பான்மையான முஸ்லிம்கள் சையது அகமதுகானின் வழியைப் பின்பற்றி பிரிட்டிஷாரை ஆதரிக்கத் தொடங்கினர்.

A) கூற்று (i) மற்றும் (ii) சரி

B) கூற்று (i) சரி (ii) தவறு

C) கூற்று (i) தவறு (ii) சரி லாம்

D) கூற்று (i) மற்றும் (ii) தவறு

23) பின்வருவனவற்றுள் முஸ்லிம்களின் பயம் அதிகரிக்க காரணம்/கள் எது/எவை?

i ) பிரதிநிதித்துவ அமைப்புகளின் அறிமுகம்

ii ) அரசுப் பணிக்கான போட்டித் தேர்வுகள்

A) கூற்று (i) மற்றும் (ii) சரி

B) கூற்று (i) சரி (ii) தவறு

C) கூற்று (i) தவறு (ii) சரி லாம்

D) கூற்று (i) மற்றும் (ii) தவறு

24) சையது அகமது கான் தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு

i ) அரசாங்கத்தோடு இணக்கமாக செயல்படுவதன் மூலம் தனது இனத்திற்கு அரசாங்கத்திடமிருந்து பெரும்பங்கினை பெற்றுத்தர இயலும் என்று எண்ணினார்.

ii ) அரசாங்கத்திற்கு எதிராக செயல்படும் பட்சத்தில் தம் இனத்தவர்கள் பெரும்பான்மையினர் என்பதால் குறைவான அரசு வெகுமதியே கிடைக்கும் என்று எண்ணினார்.

A) கூற்று (i) மற்றும் (ii) சரி

B) கூற்று (i) சரி (ii) தவறு

C) கூற்று (i) தவறு (ii) சரி லாம்

D) கூற்று (i) மற்றும் (ii) தவறு

25) இலண்டன் பிரிவி கவுன்சிலிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் யார்?

A) சௌகத் அலி

B) முகமது அலி

C) சையது அகமது கான்

D) சையது அமீர் அலி

26) கூற்று: முஸ்லிம் தலைவர்கள் காங்கிரசை முழுமையாக எதிர்த்தனர்.

காரணம்: காங்கிரசில் முஸ்லிம்கள் பங்கேற்றால் அது ஆட்சியாளர்களிடையே அவர்கள் இனத்திற்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கருதினர்.

A) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

B) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

27) பின்வருவனவற்றுள் சரியான கூற்றுகளைக் கண்டுபிடிக்கவும்.

கூற்று I : வகுப்புவாத உணர்வுகள் வளர்க்கப்பட்டதனால் ஏற்பட்ட எதிர்பாராத விளைவுகளை, மக்களாட்சி அரசியலில் சந்திக்க நேர்ந்தது.

கூற்று II : 1890களில் உள்ளாட்சி அமைப்புகள் வகுப்புவாத அரசியல் வளர்வதற்கு உதவின.

கூற்று III : நகராட்சி உறுப்பினர்கள் அதிக அதிகாரங்களைப் பெற்று தங்கள் அரசியல் நிலையை வலுப்படுத்திக் கொண்டார்கள்.

A) I மற்றும் II

B) I மற்றும் III

C) II மற்றும் III

D) அனைத்தும்

28) நகராட்சிகள் வகுப்புவாத அடிப்படையில் அமைக்கப்பட்டதை விளக்கியுள்ளவர் யார்?

A) லாலா லஜபதி ராய்

B) லால் சந்த்

C) தயானந்த சரஸ்வதி

D) மதன் மோகன் மாளவியா

29) "நகராட்சி உறுப்பினர்கள், நகராட்சித் தலைவரது நாற்காலியின் வலது மற்றும் இடது புறங்களில் இரு வரிசைகளாக அமர்ந்திருந்ததன் மூலம் முகமதியர்களாகவும், இந்துக்களாகவும் இருப்பதையும் நினைவுபடுத்திக் கொண்டிருந்தனர்" என்று விவரிப்பவர்?

A) லாலா லஜபதி ராய்

B) லால் சந்த்

C) தயானந்த சரஸ்வதி

D) மதன் மோகன் மாளவியா

30) காங்கிரசின் பலவீன கொள்கை தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வங்காளத்தில் சுதேசி இயக்கம் (1905 – 06) தொடங்கப்பட்டபோது, அதை ஆதரித்த முஸ்லிம்கள் காங்கிரஸின் தரகர்கள் என்ற கண்டனத்திற்கு உள்ளாயினர்.

ii ) காங்கிரஸ் இத்தகைய வாதங்களை மறுத்து தக்க எதிர்வினை ஆற் றியது.

iii ) தேசியவாத முஸ்லிம்கள் தங்கள் ஊக்கத்தையும், நம்பிக்கையும் இழந்தனர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

31) இந்து வகுப்புவாதம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முன்வைத்த காரணங்கள் எவை?

i ) முஸ்லிம்கள் ஆட்சி பற்றிய வரலாற்றுப் பார்வையில், இந்துக்களை கட்டாய மதமாற்றம் செய்தது

ii ) ஜிசியா வரி விதித்தது

iii ) முஸ்லிம்களின் ஷரியத் சட்டத்தைக் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்தியது

iv ) இந்து வழிபாட்டுத் தலங்களை இடித்தது

A) i ), ii ), iii ), iv )

B) i ), ii ), iii )

C) ii ), iii )

D) ii ), iii ), iv )

32) "மனசாட்சியுள்ள இந்து மற்றும் முஸ்லிம் பொதுமக்கள் இத்தகைய வகுப்புவாதத்திலிருந்து முற்றிலும் விலகியே இருந்தனர்." என்பது யார் கூற்று?

A) காந்தியடிகள்

B) சி.ஆர்.தாஸ்

C) சர்தார் வல்லபாய் பட்டேல்

D) ஜவஹர்லால் நேரு

33) கணபதி விழா மூலம் இந்துக்களை திரட்டுவதற்கு முயற்சி மேற்கொண்டவர்?

A) அரவிந்த கோஷ்

B) திலகர்

C) லாலா லஜபதி ராய்

D) லால்சந்த்

34) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) 1909ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பஞ்சாப் இந்து சபை, இந்து இனவாத கருத்தியல் மற்றும் அரசியலுக்கான அடித்தளத்தை அமைத்தது.

ii ) முஸ்லிம்களை திருப்திப்படுத்தும் கொள்கையை, இந்திய தேசிய காங்கிரஸ் பின்பற்றியதற்கு லாலா லஜபதி ராய் கடும் கண்டனம் தெரிவித்தார்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

35) பின்வருவனவற்றுள் முஸ்லீம் லீக் உருவாக்கத்தோடு தொடர்புடையது எது?

A) புவனேஷ்வர்

B) லக்னோ

C) சிம்லா

D) மைசூர்

36) ஆகாகான் தலைமையின் கீழ் ஒன்று திரண்ட முசுலிம்கள் அப்போதைய அரசப்பிரதிநிதியான மிண்டோ பிரபுவிடம் முன்வைத்த கருத்துக்களை தேர்ந்தெடு.

i ) அரசுப் பணிகளில் முஸ்லிம்களின் சதவீதத்தை உயர்த்துதல்

ii ) உயர்நீதி மன்றங்களில் முஸ்லிம் நீதிபதிகளின் நியமனம்

iii) அரச பிரதிநிதியின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராதல்

iv) முஸ்லிம்களுக்கு அனைத்து பொதுப்பணிகளிலும் இட ஒதுக்கீடு

A) i ), ii ), iii), iv )

B) i ), ii ), iii)

C) ii ), iii)

D) ii ), iii), iv )

37) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) முஸ்லிம் லீக் முஸ்லிம்களின் நோக்கங்களுக்கு ஒரு பாதுகாப்பினை 1907ஆம் ஆண்டில் வழங்கியது.

ii ) இவ்வியக்கத்தில் விவசாயிகள், நெசவாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோர் மட்டும் உறுப்பினர்களாக இருந்து செயலாற்றினர்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

38) முஸ்லீம் லீக் பின்வரும் எவற்றுக்கு பாதுகாப்பு வழங்கியது?

i ) வங்காளப் பிரிவினை

ii ) முஸ்லிம்களுக்கான தனித்தொகுதி கோரிக்கை

iii) அரசுப்பணிகளில் முஸ்லிம்களுக்கான பாதுகாப்பினை வலியுறுத்துதல்

A) i ), ii ), iii)

B) i ), ii )

C) ii ), iii)

D) i ), iii)

39) முதல் முறையாக முஸ்லிம்களுக்கென பிரத்தியேகமாக மையப்படுத்தப்பட்ட ஓர் அரசியல் கட்சியாக இருந்தது எது?

A) அலிகர் இயக்கம்

B) தியோபந்த் இயக்கம்

C) கிலாபத் இயக்கம்

D) முஸ்லீம் லீக்

40) பின்வருவனவற்றுள் அனைத்து இந்திய முஸ்லிம்லீக்கின் நோக்கங்களை தேர்ந்தெடு.

i ) இந்திய முஸ்லிம்களின் விருப்பங்கள் மற்றும் அரசியல் உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்துதல்

ii ) தங்களது தேவைகள், உயர்ந்த லட்சியங்களை கண்ணியமான முறையில் அரசுக்குத் தெரிவித்தல்.

iii) இந்துக்களை விட முஸ்லீம்களே உயர்ந்தவர் என்ற கொள்கையை கடைபிடித்தல்

A) i ), ii ), iii)

B) i ), ii )

C) ii ), iii)

D) i ), iii)

41) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) தொடக்கத்தில் நகர்ப்புற மேல்தட்டு மக்களுக்கான ஒரு அமைப்பாகவே அனைத்து இந்திய முஸ்லிம் லீக் இருந்தது.

ii ) பிரிட்டிஷ் அரசின் ஒத்துழைப்பைப் பெற்று இந்திய முஸ்லிம்களுக்கான தனிப்பட்ட பிரதிநிதித்துவ உறுப்பாக இது மாறியது.

iii) உருவாக்கப்பட்ட இரண்டே ஆண்டுகளில் முஸ்லிம்களுக்கான தனித்தொகுதி பெறுவதை வெற்றிகரமாக சாதித்தது எனலாம்.

A) i ), ii ), iii)

B) i ), ii )

C) ii ), iii)

D) i ), iii)

42) முஸ்லிம்களின் தனி அரசியல் அடையாளத்திற்கான அலுவல் முத்திரையை முஸ்லிம் லீக்கிற்கு வழங்கியது எது?

A) சிம்லா மாநாடு

B) லக்னோ ஒப்பந்தம்

C) மவுண்ட் பேட்டன் திட்டம்

D) இராஜாஜி திட்டம்

43) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) தனித் தொகுதி அல்லது வகுப்புவாரித் தொகுதி முறையில் முஸ்லிம்கள் மட்டுமே முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்.

ii ) 1919 ஆம் ஆண்டு மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டம், பேரரசு சட்டமன்றத்தில் அலுவலரல்லாத 27 உறுப்பினர்களுக்கான இடங்களில் எட்டு இடங்களை முஸ்லிம்களுக்கு வழங்கியது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

44) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

winmeen.com

i ) பிரிட்டிஷ் இந்தியஅரசு, வகுப்புவாதத்தை வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும் இந்து மகா சபையை பயன்படுத்தியது.

ii ) மக்கள் தனிதொகுதிகளாகப் பிரிக்கப்பட்டதால், அவர்கள் வகுப்புவாத அடிப்படையிலேயே வாக்களித்தனர்.

iii ) தங்கள் குறைகளை வகுப்புவாத அடிப்படையிலேயே வெளிப்படுத்தினர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

45) "தனித்தொகுதி என்பது 62 மில்லியன் மக்கள் தூண்டிவிடப்பட்ட எதிர் முகாமில் சேர்ந்துவிடாமல் இழுத்துப்பிடிக்கும் முயற்சி என்பதைத் தவிர வேறில்லை" என்று யாருக்கு கடிதம் எழுதப்பட்டது?

A) எல்பின்ஸ்டோன்

B) எல்ஜின்

C) எல்லன் பர்க்

D) லேடி மிண்டோ

46) பின்வரும் எந்த அறிவிப்பு மூலம் ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற கோட்பாடு அரசமைப்பு சட்டத்தில் முறையாக நுழைந்தது?

A) மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டம்

B) பிட்ஸ் இந்தியா சட்டம்

C) தனித்தொகுதி

D) வங்கப்பிரிவினை

47) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) பிறமதத்தாரோடு பொருள்சார்ந்த பிரச்சனைகளிலும் கூட விரோதப்போக்கோடு சண்டையிடும் வகையில் ஒரு மதத்தினரை உருவாக்குவது தீவிரவாதம் ஆகும்

ii ) வகுப்புவாதம் என்ற கருத்தாக்கம் அல்லது இயக்கத்தை பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விதமாக வரையறுத்துள்ளனர்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

48) "வகுப்புவாதம் என்பது தேசியவாதம் என்ற கருத்தாக்கத்திற்கு முற்றிலும் எதிரானது" என்று கூறுபவர் யார்?

A) காந்தியடிகள்

B) சர்தார் வல்லபாய் பட்டேல்

C) ஜவஹர்லால் நேரு

D) மதன்மோகன் மாளவியா

49) 1915இல் இந்துக்களின் முதல் அகில இந்திய மாநாடு எங்கு கூட்டப்பெற்றது?

A) பஞ்சாப்

B) ஹரித்துவார்

C) பெரோஷ்பூர்

D) வாரணாசி

50) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) டேராடூனைத் தலைமையிடமாகக் கொண்டு அகில இந்திய இந்து மகாசபை தொடங்கப் பெற்றது.

ii ) மாகாண இந்துசபைகள் அலகாபாத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஐக்கிய மாகாணத்திலும் பம்பாயிலும், பீகாரிலும் தொடங்கப்பெற்றன.

iii ) பம்பாயிலும், பீகாரிலும் இவ்வமைப்புகளுக்கு ஓரளவிலான ஆதரவேயிருந்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

51) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) கிராமப்புற இயல்பினை அதிகம் கொண்டிருந்த இந்து மகாசபை வட இந்தியாவின் பெரும் வணிக நகரங்களில் வீரியத்துடன்செயல்பட்டது.

ii ) ஐக்கிய மாகாணத்திலும் பீகாரிலும் பெரும்பாலும் படித்த இடைத்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த தலைவர்களால் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

52) கூற்று: 1920 – 1922 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்து மகாசபை செயல்படவில்லை.
காரணம்: வகுப்புவாதிகளின் பிரிவினைவாத அரசியலைக் கிலாபத் இயக்கம் ஓரளவுக்கு ஒத்திபோட்டது.

A) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

B) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

53) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) அரசியலில் உலோமாக்கள் நுழைந்ததானது இந்துக்களிடையே ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட, புத்துயிர் பெற்ற இஸ்லாமைப் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியது.

ii ) அலி சகோதரர்களைப் போன்ற முக்கிய முஸ்லிம் தலைவர்கள் காங்கிரஸ்காரர்களாய் இருந்தனர், அடுத்தபடியாகத்தான் முஸ்லிம்களாக இருந்தனர்.

iii ) கிலாபத் இயக்கத்தின்போது மத அடிப்படையில் மக்களைத் திரட்டும் பணியில் முஸ்லிம்கள் காட்டிய திறன், இந்துக்களை ஒன்று திரட்ட அதே பாணியைப் பின்பற்ற இந்து வகுப்பு வாதிகளைத் தூண்டியது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

54) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) சுத்தி இயக்கம் ஒரு புதிய நிகழ்வாக இல்லாவிட்டாலும் கிலாபத் இயக்கத்திற்கும் பின்வந்த காலங்களில் அது புதிய முக்கியத்துவத்தைப் பெற்றது.

ii ) 1921இல் வேல்ஸ் இளவரசரின் வருகை இந்தியர்களால் புறக்கணிக்கப்பட்டது.

iii ) சுவாமி பரமானந்தா பகவத் கீதையைப் பரப்புரை செய்வதன் மூலம் இந்து மகாசபைக்கு புத்துயிர் அளிக்க முனைந்தார்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

55) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) முதல் உலகப்போருக்கு முன்னர் கலீஃபா, காபா ஆகியவற்றின் நலன்களைப் பாதுகாப்பதாக இங்கிலாந்து வாக்குறுதி வழங்கியிருந்தது.

ii ) முதல் உலகப்போரில் துருக்கியின் தோல்விக்குப் பின்னர் அவ்வாக்குறுதி யில் பாதியை நிறைவேற்ற மறுத்துவிட்டது.

iii ) திகைத்துப்போன முஸ்லிம் சமூகத்தினர் ஆங்கிலேயருக்குத் தங்கள் கோபத்தைக் காட்டவும், துருக்கியின் கலீஃபாவை பாதுகாக்கவும், கிலாபத் இயக்கத்தைத் தொடங்கினர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

56) மலபார் கிளர்ச்சி எந்த ஆண்டு நடைபெற்றது?

A) 1921

B) 1922

C) 1923

D) 1920

57) மலபார் கிளர்ச்சி அடிப்படையில் எத்தன்மை கொண்டது?

A) வணிகர் கிளர்ச்சி

B) மதக்கிளர்ச்சி

C) தொழிலாளர் கிளர்ச்சி

D) விவசாய கிளர்ச்சி

58) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1922இல் ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்டது.

ii ) 1923 இல் கலீஃபா பதவி ஒழிக்கப்பட்டது.

iii ) ஒத்துழையாமை இயக்கத்தின் பின் விளைவாகக் காங்கிரசுக்கும் முஸ்லிம் லீக்குக்குமான ஒப்பந்தம் சிதைந்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

59) சுயாட்சி நிறுவனங்கள் எந்த ஆண்டு அடிப்படை சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டன?

A) 1909

B) 1919

C) 1935

D) 1942

60) இந்து மகாசபையின் ஆறாவது மாநாடு எங்கு நடைபெற்றது?

A) பெரோஷ்பூர்

B) காராப்பூர்

C) பஞ்சாப்

D) வாரணாசி

61) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1930கள் காங்கிரசிற்கு சோதனைகள் மிகுந்த காலமாகும்.

ii ) ஐக்கிய மாகாணத்தில் ஏற்பட்ட வகுப்புவாதப் பதட்டத்திற்கு இந்து முஸ்லிம் தலைவர்களின் மத ஈடுபாடு மட்டும் காரணமல்ல.

iii ) சுயராஜ்யவாதிகளுக்கும் தாராளவாதிகளுக்குமான (Liberal Party) அரசியல் போட்டிகளும் தூண்டுகோலாய் அமைந்தன.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

62) "மாளவியாவின் குடும்பத்தார் வேண்டுமென்றே இந்துக்களைத் தூண்டிவிட்டனர். இச்செயல் முஸ்லிம்களின் மீது எதிர்வினையாற்றியது" எனத் தனது அறிக்கையில் குறிப்பிட்டவர் யார்?

A) ஹோம்ஸ்

B) சாண்டர்ஸ்

C) எல்ஜின்

D) குரோஸ்த்வெயிட்

63) 1924இல் பஞ்சாப் மாகாணம் இந்து, முஸ்லிம் மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென வெளிப்படையாகக் கூறியவர் யார்?

A) லாலா லஜபதி ராய்

B) சர்தார் வல்லபாய் பட்டேல்

C) ஜவஹர்லால் நேரு

D) மதன்மோகன் மாளவியா

64) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) சுத்தி இயக்கம் அரசியல் களத்தில் இந்துமத மறுமலர்ச்சிக்கு ஆதரவான சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

ii ) இந்துமகாசபை 'அகண்ட இந்துஸ்தான்' என்னும் முழக்கத்தை முன் வைத்தது.

iii ) இது முஸ்லிம் லீக்கின் தனித்தொகுதிக் கோரிக்கைக்கு எதிராக வைக்கப்பட்டதாகும்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

65) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) இந்து மகாசபை நிறுவப்பட்டதிலிருந்து சுதந்திரப் போராட்டத்தில் அதன் பங்கு முரண்பட்டதாகவே இருந்தது.

ii ) ஆங்கிலேய ஆட்சியை ஆதரித்த இந்து மகாசபை தேசிய இயக்கத்திற்கும் தனது முழுமையான ஆதரவை நல்கியது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

66) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) அந்நிய மேலாதிக்கத்திற்கு எதிராக அனைத்து வர்க்கங்களின், சமூகங்களின் ஆதரவைத் திரட்ட வேண்டிய அவசியம் இந்து மகா சபைக்கு இருந்தது.

ii ) பல்வேறு சமூகங்களின் தலைவர்களால் சமய உணர்வுமிக்கக் குழுவினரின் ஆதரவை இழக்க நேரிடும் எனும் அச்சத்தின் காரணமாக சமயச் சார்பின்மை எனும் கோட்பாட்டை வலியுறுத்த முடியவில்லை.

iii ) காந்தியடிகளின் தலைமையில் காங்கிரஸ் பல ஒற்றுமை மாநாடுகளை நடத்திய போதிலும் அவற்றால் பயன்களேதும் ஏற்படவில்லை.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

67) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1927 மார்ச் 20இல் லாகூரில் முஸ்லிம்களின் மாநாடு நடைபெற்றது.

ii ) இம்மாநாட்டின் நிகழ்வுகள் ஒற்றுமைக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் உன்னத வெளிப்பாடாய் அமைந்தது.

iii ) மாநாடு முன்வைத்த நான்கு கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், தனித்தொகுதிக்கோரிக்கையை தாங்கள் கைவிடுவதாக முஸ்லிம்கள் அறிவித்தனர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

68) 1927 இல் டெல்லியில் நடைபெற்ற முஸ்லிம்களின் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை தேர்ந்தெடு.

i ) பம்பாயிலிருந்து சிந்துப் பகுதியைத் தனியாகப் பிரிப்பது.

ii ) பலுச்சிஸ்தானையும் அதன் எல்லைகளையும் சீர்திருத்துவது

iii ) பஞ்சாபிலும் வங்காளத்திலும் மக்கள் தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவம்

iv ) மாகாண சட்டமன்றத்தில் முஸ்லிம்களுக்கு 30 விழுக்காடுகள் இட ஒதுக்கீடு.

A) i ), ii ), iii ), iv )

B) i ), ii ), iii )

C) ii ), iii )

D) ii ), iii ), iv )

69) டெல்லி முஸ்லிம் மாநாடு வடிவமைத்த புதிய கருத்துக்களை ஒப்புக்கொள்ளும்படி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியை வற்புறுத்தியவர்/கள்?

i ) மோதிலால் நேரு

ii ) ஸ்ரீனிவாசன்

iii ) சி.ஆர்.தாஸ்

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

70) இந்து முஸ்லீம் பிரச்சனையைத் தீர்க்கும் விதமாக காங்கிரஸ் அமைத்த குழு/குழுக்கள் குறித்தவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு.

i ) பஞ்சாபிலிருந்து சிந்துவை பிரிப்பது நிதியாதார அடிப்படையில் இயலும் என்பதைக் கண்டறிய ஒரு குழு.

ii ) முஸ்லிம் பெரும்பான்மையைப் பாதுகாக்கும் ஒரு உத்தியாக விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் குழு

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

71) இந்து – முஸ்லிம் ஒற்றுமையின் தூதுவர் என ஜின்னாவுக்கு புகழாரம் சூட்டியவர்?

A) அன்னிபெசண்ட்

B) திலகர்

C) நேரு

D) சரோஜினி

72) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1928இல் கல்கத்தாவில் கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், காங்கிரசின் உறுப்பினர்கள் திருத்தங்கள் அனைத்தையும் ஒப்புக்கொள்ள மறுத்தனர்.

ii ) ஒற்றுமைக்கான வாய்ப்புகள் அனைத்தையும் அழித்தபோது ஜின்னா, தான் கைவிடப்பட்டதாக வேதனையுற்றார்.

iii ) நாட்டை விட்டு வெளியேறிய ஜின்னா பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு முதல்தரமான வகுப்புவாதியாக நாடு திரும்பினார்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

73) "தனிமனிதர்களின் எண்ணிக்கையைப் போலவே பல மதங்கள் உள்ளன." என்று குறிப்பிட்டவர் யார்?

A) பஞ்சாப் ஆளுநர்

B) இந்திய அரச பிரதிநிதி

C) சென்னை ஆளுநர்

D) உயர் நீதிமன்ற நீதிபதி

74) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதில் ஆங்கில அரசு உறுதியாய் இருந்தது.

ii ) மூன்றாவது வட்டமேஜை மாநாட்டுப் பிரதிநிதிகள் வகுப்புவாத அடிப்படையில்தான் தேர்வு செய்யப்பட்டனர்

iii ) வட்ட மேஜை மாநாடுகளின் தோல்விக்குப் பின்னர் இங்கிலாந்து பிரதமர் ராம்சே மெக்டொனால்டு வகுப்புவாதத் தீர்வை அறிவித்தார்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

75) ராஷ்ட்ரிய சுயசேவா சங்கம் குறித்த பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1925இல் உருவாக்கப்பட்ட ராஷ்ட்ரிய சுயசேவா சங்கம் (R.S.S.) விரிவடைந்து கொண்டிருந்தது.

ii ) அதன் உறுப்பினர் எண்ணிக்கை 1,00,000 மாக உயர்ந்தது.

iii ) K.B. ஹெட்கே வ ர் , V.D. சவார்க்கர், M.S. கோல்வாகர் ஆகியோர் இந்து ராஷ்டிரா எனும் கோட்பாட்டை மேலும் விரிவாக்கம் செய்யும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

76) "இந்துக்கள் ஆகிய நாங்கள் நாங்களாகவே ஒரு தேசமாக உள்ளோம்" என்று கூறியவர் யார்?

A) வீரராகவாச்சாரி

B) V.D. சவார்க்கர்

C) கோல்வாக்கர்

D) மதன்மோகன் மாளவியா

77) கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று எது?

i ) 1936 முதலாகவே தனது உறுப்பினர்கள் இந்து மகாசபையிலோ ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திலோ இணைவதைக் காங்கிரஸ் தடைசெய்தது.

ii ) டிசம்பர் 1938இல் தான் காங்கிரஸ் செயற்குழு இந்து மகாசபையில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் காங்கிரசில் உறுப்பினர்களாக இருக்கத் தகுதி இல்லாதவர்கள் என அறிவித்தது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

78) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) இந்திய தேசிய காங்கிரஸின்தேசியவாதத்தை உருவகப்படுத்திய மகாத்மா அரச பிரதிநிதி ஆரிய சமாஜமும், அலிகார் இயக்கமும் முன்வைத்த குறுகிய தேசியவாதத்தை மறுத்தார்.

ii ) பல்வேறு மதங்களுக்கு அப்பாற்பட்ட, அவற்றைக் கடந்த ஓர் அரசியல் அடையாளத்தை தோற்றுவிக்க அவர் விரும்பினார்.

iii ) பல்வேறு சாயல்களைக் கொண்ட அரசு ஆதரவு பெற்ற வகுப்புவாத சக்திகள் இருந்த போதிலும் இந்தியாவில் அகில இந்திய தேசிய காங்கிரஸ் பெரும் செல்வாக்குப் பெற்ற சக்தியாகத் திகழ்ந்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

79) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1937இல் தேர்தல் நடைபெற்ற பதினோரு மாகாணங்களில் ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றி வாகை சூடியது.

ii ) முஸ்லிம் லீக்கின் செயல்பாடு மோசமாகவே அமைந்தது.

iii ) மொத்த முஸ்லிம் வாக்குகளில் 4.8 விழுக்காடு வாக்குகளைப் பெறுவதில் மட்டுமே அது வெற்றி பெற்றது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

80) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) காங்கிரஸ், மதச்சார்பற்ற மாபெரும் மக்கள் கட்சியாக எழுச்சி பெற்றது.

ii ) ஆங்கிலேய அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உண்மையான பிரதிநிதியாக முஸ்லிம் லீக்கை மட்டுமே முன்னிலைப்படுத்தியது.

iii ) ஆங்கிலேய அரசாங்கம் முஸ்லிம் லீக்கை காங்கிரசிற்கு சமமற்ற சக்தியாகவே நடத்தியது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

81) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) தேர்தல் முடிவுகளால் மகிழ்ச்சி அடைந்த முஸ்லிம் லீக், டெல்லியிலும் மும்பையிலும் வகுப்புவாத அடிப்படையிலான உணர்வுகளைத் தூண்டிவிடுவதே தனக்கிருக்கும் ஒரே வாய்ப்பு எனக் கருதியது.

ii ) தேர்தல்களில் பெற்ற பெரும் வெற்றியும், அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையும் காங்கிரசை முஸ்லிம் லீக்கின் உணர்வுகளை சரியாக எடைபோட வைத்தது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

82) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) 1936 – 37 தேர்தல்கள் பிரிவினைக்கான காரணமானாலும் அதில் இந்து மகாசபை கூட்டு அமைச்சரவைகள் அமைப்பதற்காக முஸ்லிம் லீக்கிற்கு உதவியது.

ii ) 1936 – 37 தேர்தல்களுக்குப் பின்னர் பெருவாரியான இஸ்லாமிய மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக "இஸ்லாம் ஆபத்தில் உள்ளது" என்ற உணர்ச்சிகரமான முழக்கத்தை முன்வைத்து இயக்கம் நடத்தப்பட்டது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

83) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i ) 1939 இல் இரண்டாம் உலகப்போர் வெடித்தது.

ii ) இந்தியாவின் அரச பிரதிநிதியாக இருந்த இர்வின் இந்தியாவும் போரில் இருப்பதாக உடனடியாக அறிவித்தார்.

iii ) காங்கிரசைக் கலந்தாலோசிக்காமல் இம்முடிவு எடுக்கப்பட்டதால் காங்கிரஸ் மிகவும் ஆத்திரமடைந்தது.

iv ) காங்கிரஸ் செயற்குழு மாகாணங்களைச் சேர்ந்த காங்கிரஸ் அமைச்சர்கள் அனைவரும் ராஜினாமாச் செய்ய வேண்டுமென முடிவு செய்தது.

A) i ), ii ), iii ), iv )

B) i ), iii ), iv )

C) ii ), iii )

D) ii ), iii ), iv )

84) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) காங்கிரஸ் அமைச்சர்களின் ராஜினாமாவைத் தொடர்ந்து மாகாண ஆளுநர்கள் சட்டமன்றங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்த பின்னர் மாகாண நிர்வாகப் பொறுப்பைத் தாங்களே ஏற்றுக் கொண்டனர்.

ii ) காங்கிரஸ் ஆட்சி முடிவடைந்ததை மீட்பு நாளாக 1940 டிசம்பர் 26இல் முஸ்லிம் லீக்கொண்டாடியது.

iii ) முஸ்லிம்களுக்கு எதிராக காங்கிரஸ் மேற்கொண்ட செயல்களுக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

85) முஸ்லிம் லீக், முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டுமென்ற கோரிக்கையைத் தீர்மானமாக எங்கு நிறைவேற்றியது?

A) லாகூர்

B) கோரக்பூர்

C) சிம்லா

D) அலகாபாத்

86) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) பாகிஸ்தான் என்ற எண்ணவோட்டம் 1940இல் முஸ்லிம் லீக் மேடைகளிலிருந்து வெளிப்பட்டாலும் பத்து ஆண்டுகளுக்கு முன்பாகவே கவிஞரும் அறிஞருமான முகமது இக்பாலால் சிந்திக்கப்பட்டதாகும்.

ii ) 1930இல் அலகாபாத்தில் நடைபெற்ற முஸ்லிம் லீக்கின் ஆண்டு மாநாட்டில் இக்பால் ஒருங்கிணைக்கப்பட்ட வடமேற்கு இந்திய முஸ்லிம் அரசைத் தான் காண விரும்புவதாகக் கூறினார்.

iii ) கேம்பிரிட்ஜ் மாணவர்களில் ஒருவரான சர் வாசிர் ஹசன் என்பவரால் வலுவாக வெளிப்படுத்தப்பட்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

87) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) லீக்கின் அடிப்படைக் கோரிக்கையானது 'இரு நாடு கொள்கை' ஆகும்.

ii ) இதனை முதலில் ரகமது அலி என்பவர்தான் 1937இல் நடைபெற்ற பம்பாய் லீக் மாநாட்டில் தனது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

iii ) இப்பரந்த கண்டத்தில் வாழும் இந்துக்களும் முஸ்லிம்களும் இரண்டு சமூகங்கள் அல்ல, ஆனால் பல வழிகளில் இரு நாட்டினராக கருதுதல் வேண்டும் என்று சர் வாசிர் ஹசன் கூறினார்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

88) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) முதலில் ஜின்னாவோ, நவாப் ஜாஃபருல்லா கானோ முஸ்லிம்களுக்கு தனி நாடு உருவாக்குவது சாத்தியமாகும் என்று கருதவில்லை.

ii ) 1942 மார்ச் 22இல் முஸ்லிம் லீக் தனி மாநில தீர்மானத்தை நிறைவேற்றியது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

89) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) முஸ்லிம்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக உள்ள பகுதிகள் சுதந்திரமான தனி மாநிலமாக அமைக்கப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது.

ii ) பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை விட்டுச் செல்லும் முன் நாட்டை இந்திய யூனியன் மற்றும் பாகிஸ்தான் யூனியன் என பிரிவினை செய்ய வேண்டுமென்று முஸ்லிம் லீக் தீர்மானித்தது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

90) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1940களின் தொடக்கத்தில் இந்து மற்றும் முஸ்லிம் வகுப்புவாதங்கள் ஒன்றையொன்று ஊட்டி வளர்த்தன.

ii ) 1942இல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை முஸ்லிம் லீக் பங்கேற்றது.

iii ) 1946இல் அரசியல் நிர்ணய சபைக்கு நடைபெற்ற தேர்தலில் முஸ்லிம் லீக் மத்திய சட்டமன்றத்தில் தனக்கென ஒதுக்கப்பட்ட 30 இடங்களிலும் வென்றதோடு, மற்ற மாகாணங்களில் ஒதுக்கப்பட்ட பெரும்பாலான இடங்களையும் வென்றது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

91) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) காங்கிரஸ் கட்சி பொது தொகுதிகள் அனைத்தையும் வெற்றிகரமாக கைப்பற்றியது.

ii ) ஒட்டுமொத்த பிரிட்டிஷ் இந்திய மக்களின் குரலாக ஒலிக்கும் கட்சி அதுமட்டுமே என்ற கருத்தை வலியுறுத்தியது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

92) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1946இல் அரசு செயலாளரான பெதிக் லாரன்ஸ் தலைமையில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவைத் தூதுக்குழு புதுடெல்லி வந்தது.

ii ) காங்கிரஸ் – முஸ்லிம் லீக் இடையிலான பிணக்கைத் தீர்த்து அதிகாரத்தை ஒரு இந்திய நிர்வாக அமைப்பிடம் மாற்றம் செய்யும் நம்பிக்கையோடு வந்தது.

iii ) மூன்று உறுப்பினர்களில் ஒருவரான கிரிப்ஸ் அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்ட வரைவு தயாரிப்பில் முக்கிய பங்காற்றினார்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

93) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டமானது இந்தியாவிற்கு இரண்டடுக்கு கொண்ட கூட்டாட்சி முறையைப் பரிந்துரைத்தது.

ii ) கூட்டாட்சி முறையில் டெல்லியிலுள்ள மத்திய அரசாங்கம் ஒருங்கிணைக்கப்பாளராக இருக்கும்.

iii ) மத்திய அரசாங்கம் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

94) அமைச்சரவை தூதுக்குழுவின் திட்டப்படி இந்தியா எத்தனை குழுக்களாக வகைப்படுத்தப்பட்டது?

A) மூன்று

B) நான்கு

C) இரண்டு

D) ஐந்து

95) அமைச்சரவை தூதுக்குழுவின் திட்டம் தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளைத் தவிர மற்ற அனைத்துத் துறைகளிலும் மாகாண அரசாங்கங்கள் தன்னாட்சி அதிகாரம் கொண்டு விளங்கும்.

ii ) இக்குழுவில் உள்ள சுதேச அரசுகள் பின்னர் அந்தந்த குழுக்களில் ஒருங்கிணைக்கப்பட்டு அவற்றின் அருகில் இருக்கும் மாகாணங்களோடு இணைக்கப்படும்.

iii ) உள்ளூர் மாகாண அரசுகள் தமது குழுவிலிருந்து வெளியேற வாய்ப்பு தரப் படவில்லை.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

96) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) காங்கிரஸ் தலைவர்களும் ஜின்னாவும் அமைச்சரவைத் தூதுக்குழு திட்டத்தை ஏற்றுக்கொண்டனர்.

ii ) பல வாரங்கள் நடைபெற்ற இரகசிய பேச்சுவார்த்தைகளுக்குப் பின் 1946 ஜூலை 29இல் முஸ்லிம் லீக் அமைச்சரவைத் தூதுக்குழு திட்டத்தை நிராகரிப்பதாக அறிவித்தது.

iii) இந்தியாவிலுள்ள அனைத்து முஸ்லிம்களையும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் டிசம்பர் 22 அன்று 'நேரடி நடவடிக்கை நாளில்' ஈடுபடவும் அழைப்பு விடுத்தது.

A) i ), ii ), iii)

B) i ), ii )

C) ii ), iii)

D) i ), iii)

97) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) கல்கத்தாவில் நான்கு நாட்கள் கலவரங்களும் கொலைகளும் நடந்தேறின.

ii ) நாட்டைப் பிரிவினை செய்யும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த காந்தியடிகள் முஸ்லிம் லீக்கின் பாகிஸ்தான் கோரிக்கையை ஏற்றார்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

98) அதிகாரத்தை மாற்றித்தரவும் நாட்டின் பிரிவினையை நடைமுறைப்படுத்தவும் இந்தியா வந்தவர் யார்?

A) ரெட்க்ளிப்

B) வேவல்

C) மவுண்ட் பேட்டன்

D) கிரிப்ஸ்

99) பின்வருவனவற்றை கால வரிசைப்படி வரிசைப்படுத்துக.

1. மீட்பு நாள்

2. நேரடி நடவடிக்கை நாள்

3. மலபார் கிளர்ச்சி

4. ராஷ்ட்ரிய சுயசேவா சங்கம்

A) 1, 2, 3, 4

B) 2, 1, 4, 3

C) 2, 4, 3, 1

D) 3, 4, 1, 2

100) பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

A) கலீபா பதவி ஒழிப்பு – 1. 1916

B) பஞ்சாப் இந்து சபை – 2. 1906

C) முஸ்லிம் லீக் – 3. 1924

D) லக்னோ ஒப்பந்தம் – 4. 1909

A B C D

A) 3 1 4 2

B) 1 2 3 4

C) 3 4 2 1

D) 2 3 4 1

101) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதம் சமய சீர்திருத்த இயக்கங்களோடு அடையாளப்படுத்தப்பட்டது

ii ) ஆரிய சமாஜம் மற்றும் பிரம்மஞான சபை போன்றவை இந்துமதத்தையும், வாஹாபி மற்றும் கிலாபத் இயக்கங்கள் இஸ்லாம் மதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தின.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு